

நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு நேற்று (30.08.2023) நெதர்லாந்து நாட்டின் சார்பாக சென்னையில் செயல்படுத்தப்பட உள்ள "1000 ஏரிகள் கொண்ட அபூர்வ சென்னை திட்டத்தினை சென்னை லிட்டில் பிளவர் கான்வென்டில் தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில், அரசு கூடுதல் தலைமை செயலாளர்/ தலைவர், தமிழ்நாடு தொழில் முதலீட்டு கழகம் ஹென்ஸ் ராஜ் வர்மா, அரசு முதன்மை செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முனைவர்.தா.கார்த்திகேயன், சென்னை குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குநர் ஆர்.கிர்லோஷ் குமார், நெதர்லாந்து நாட்டின் துணை தூதர்கள் ஹெங்க ஓவிங்க் (Henk Ovink), எவுட் டி விட் (Ewout de Wit), ஜெர்மன் நாட்டின் துணை தூதர் திருமிகு.மைக்கேல் குச்லர் (Michaela Kuchler), இத்திட்டத்தின் ஒருங்கிணைப்பாளர் திருமிகு. ஏவா ஃபென்னஸ் (Ev Pfannes) ஆகியோர் கலந்து கொண்டனர்.



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களிடம் லார்சன் & டுப்ரோ (Larsen & Toubro) நிறுவனத்தின் சார்பாக "தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளைக்கு ரூ.1 கோடிக்கான காசோலையை லார்சன் & டுப்ரோ நிர்வாகிகள் நேற்று (30.08.2023) முகாம் அலுவலகத்தில் வழங்கினார்கள். இந்நிகழ்ச்சியில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, , தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாதரெட்டி, கலந்து கொண்டனர்.

## ஐ.ஏ.எஸ். - ஐ.பி.எஸ். தேர்வுக்குத் தயாராக ஊக்கத் தொகை!

# ஊக்கமளிக்கும் 'நான் முதல்வன்'! முதல்வரின் முனைப்பு பாராட்டுக்குரியது!

## 'தினத்தந்தி' நாளேடு தலையங்கத்தில் புகழாரம்!

சென்னை, ஆக. 31-

ஐ.ஏ.எஸ். - ஐ.பி.எஸ். தேர்வுக்குத் தயாராக ஊக்கத் தொகை வழங்குவதால் பல மாணவர்கள் தேர்ச்சி பெற ஊக்கமளிக்கும் 'நான் முதல்வன்' திட்டத்தின் கீழ் முதல்வர் மு.க.ஸ்டாலின் எடுத்துள்ள முனைப்பு பாராட்டுக்குரியது என 'தினத்தந்தி' நாளேடு தலையங்கத்தில் புகழ்ந்துரைத்துள்ளது.

இதுகுறித்து 30.8.2023 தேதிய 'தினத்தந்தி' நாளேடு தலையங்கத்தில் கூறப்பட்டிருப்பதாவது:-

முதல்நிலை தேர்வில் வெற்றிபெறும் மாணவர்களுக்கு, முதன்மை தேர்வுக்கு தயாராக ரூ.25 ஆயிரம் ஊக்கத்தொகை வழங்கப்படும் என்று தமிழக அரசு அறிவித்துள்ளது. கல்வி திட்டங்களுக்கு அரசு காட்டும் அக்கறையால், இப்போது பள்ளிக்கூடத்துக்கு செல்லாத மாணவர்களே இல்லை என்றநிலை உருவாகியுள்ளது.

இன்றைய இளைஞர்களுக்கும், பெண்களுக்கும் கல்வியின்பால் அதிக நாட்டம் ஏற்பட்டிருப்பது, மிகவும் மகிழ்ச்சிக்குரியதாக இருக்கிறது. ஆனால், படித்து முடித்தவர்களுக்கு உடனடியாக வேலை கிடைப்பதன் மூலம்தான், அவர்களின் வாழ்க்கையை ஒளிமிக்கதாக மாற்ற முடியும். அரசு வேலைவாய்ப்புகளை உருவாக்குவதிலும், மத்திய அரசாங்கமும், தமிழக அரசும் தீவிர நடவடிக்கைகளை




எடுத்து வருகிறது.

காலாகாலமாக இளைஞர் சமுதாயத்திடம் மட்டுமல்லாமல், அவர்கள் பெற்றோரிடமும் "அரைக்காசு உத்தியோகம் என்றாலும் அரசாங்க உத்தியோகம்" என்ற ஒரு தணியாத ஆசை இருக்கிறது. ஏனெனில், அரசாங்க பணிகளில் நல்ல சம்பளம் மட்டுமல்லாமல், பல சலுகைகளும் இருக்கின்றன.

அரசு பணிகளில் உச்சபட்ச பணி, இந்திய ஆட்சி பணி என்று கூறப்படும் ஐ.ஏ.எஸ் பணிதான். மத்திய அரசாங்கத்திலும், மாநில அரசிலும் நிர்வாகத்தில் உயரிய பணி அதுதான். அதனால்தான், இளைஞர்களுக்கு இது ஒரு கனவு பணியாக இருக்கிறது.

ஆண்டுதோறும் மத்திய தேர்வாணைய குழு, சிவில் சர்வீசஸ் என்ற குடிமைப்பணிகளுக்காக ஐ.ஏ.எஸ். உள்பட பல்வேறு அகில இந்திய பணிகளுக்கான தேர்வை நடத்துகிறது. பல ஆண்டுகளுக்கு முன்பு வரை தமிழ்நாட்டில் இருந்துதான் அதிக மாணவர்கள் இந்த தேர்வில் வெற்றி பெற்ற நிலைமாறி, இப்போது மிகக்குறைவான எண்ணிக்கையிலேயே தேர்ச்சி விகிதம் இருக்கிறது.

நிறைய பேர் தேர்வாக வேண்டும் என்ற நோக்கத்தில், இந்த ஆண்டு தமிழக பட்ஜெட்டில் குடிமைப்பணி தேர்வுகளுக்கு தயாராகும் தமிழ்நாட்டு மாணவர்களுக்கு உதவும் நோக்கில், ஒவ்வொரு ஆண்டும் மதிப்பீட்டு தேர்வின் வாயிலாக தேர்வு செய்யப்படும் ஆயிரம் மாணவர்களுக்கு, 10 மாதங்களுக்கு ரூ.7,500 மாதாந்திர ஊக்கத்தொகை அறிவிக்கப்பட்டது.

இந்த திட்டம் இப்போது தமிழ்நாட்டு திறன் மேம்பாட்டு கழகத்தால் செயல்படுத்தப்படுகிறது. மதிப்பீடு தேர்வில் கலந்துகொள்ள எதிர்பார்த்ததற்கு மேலாக 50 ஆயிரத்துக்கு மேல் மாணவர்கள் விண்ணப்பித்துள்ளனர் என்று, திறன் மேம்பாட்டு கழக மேலாண்மை இயக்குனர் இன்னசென்ட் திவ்யா கூறினார்.

இந்த மாணவர்களுக்கு 1092023 அன்று தமிழ்நாடு முழுவதும் உள்ள 38 மாவட்டங்களில் மதிப்பீட்டு தேர்வு நடக்கிறது. இடஒதுக்கீடு முறையை பின்பற்றி ஆயிரம் மாணவர்கள் அவர்கள் பெற்ற மதிப்பெண் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்டு, சென்னையிலுள்ள அகில இந்திய குடிமை பணி பயிற்சி தேர்வு மையத்திலும், மதுரை, கோயம்புத்தூரில் இயங்கிவரும் அண்ணா குடிமைப்பணி பயிற்சி நிலையங்களிலும் சேர்க்கப்படுவார்கள்.

அரசு எடுக்கும் இந்த முயற்சிகளால் மாதம் ரூ.7,500 ஊக்கத்தொகை பெறும் ஆயிரம் மாணவர்களில் இருந்து, நிறைய பேர் இந்த ஆண்டு குடிமைப் பணி தேர்வில் வெற்றிபெற வாய்ப்பு இருக்கிறது என்ற வகையில், 'நான் முதல்வன்' திட்டத்தின் கீழ் முதல் அமைச்சர் மு.க. ஸ்டாலின் எடுத்துள்ள இந்த முனைப்பு பாராட்டுக்குரியது.

இதுமட்டுமல்லாமல், முதல்நிலை தேர்வில் வெற்றி பெறும் மாணவர்களுக்கு, முதன்மை தேர்வுக்கு தயாராக ரூ.25 ஆயிரம் ஊக்கத்தொகை வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. நிறைய ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். போன்ற அகில இந்திய பணி அதிகாரிகளை ஏழை, நடுத்தர குடும்பங்களில் இருந்து கொண்டுவர இந்த ஊக்கத்தொகை நிச்சயம் உதவும்.

இவ்வாறு தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளது.

## தஞ்சாவூர் மாவட்டத்தில் மரம் விழுந்து உயிரிழந்த

# மாணவியின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

தஞ்சை, ஆக. 31-

தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம் வட்டம், பசுபதிகோவில்1 கிராமத்தில் உள்ள தனியார் பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் பயின்று வரும் மாணவிகள் பாபநாசம் வட்டம், உள்ளிக்கடை, கண்டகரையத்தைச் சார்ந்த செல்வி. சுஷ்மிதாசென், த/பெ. செந்தில்குமார் (வயது15) மற்றும் பாபநாசத்தைச் சேர்ந்த செல்வி.இராஜேஸ்வரி, த/பெ.கந்தன் (வயது 15) ஆகிய இருவர் மீதும் நேற்று முன்தினம் (29.8. 2023) மாலை பெய்த மழை மற்றும் காற்றின் காரணமாக பள்ளியின் அருகிலுள்ள மரம் வேரோடு சாய்ந்து விழுந்ததில் செல்வி.சுஷ்மிதாசென் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற துயரமான செய்தியினைக் கேட்டு மிகுந்த வருத்தமடைந்தேன்.

மேலும் இவ்விபத்தில் படுகாயமடைந்து தஞ்சாவூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ள செல்வி.இராஜேஸ்வரிக்கு சிறப்பு சிகிச்சை அளிக்க அறிவுறுத்தியுள்ளேன்.

மாணவி செல்வி.சுஷ்மிதாஷென்னை இழந்து வாடும் பெற்றோருக்கும் அவரது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதல்களையும் தெரிவித்துக்கொள்வதோடு அவரது குடும்பத்தினருக்கு ஐந்து இலட்சம் ரூபாயும், படுகாயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் செல்வி.இராஜேஸ்வரிக்கு ஒரு இலட்சம் ரூபாயும் நிதியுதவி வழங்கவும் உத்தரவிட்டுள்ளேன்.

## அமைச்சர் கே.என்.நேரு தலைமையில்

# குடிநீர் வழங்கல் தொடர்பான ஆலோசனைக் கூட்டம்!

சென்னை, ஆக. 31-

தலைமைச் செயலகத்தில், நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு அவர்களின் தலைமையில் நேற்று (30.08.2023) பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் சென்னை குடிநீர் வாரியத்தின் சார்பிலும் மற்றும் பிற மாவட்டங்களில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் சார்பிலும் மேற்கொள்ளப்பட்டுவரும் குடிநீர் வழங்கல் தொடர்பான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் நாளொன்றுக்கு சுமார் 1000 மில்லியன் லிட்டருக்கும் மேலாக குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. சுமார் 85 இலட்சம் பொதுமக்களுக்கு மேலாக இதன்மூலம் பயனடைந்து வருகிறார்கள். மேலும், பிற மாவட்டங்களில் தனிக் குடிநீர் திட்டம் நீங்கலாக தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் சார்பில் 544 கூட்டுக் குடிநீர் திட்டங்கள் மூலம் நாளொன்றுக்கு 2104 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இதன்மூலம், 12 மாநகராட்சிகள், 67 நகராட்சிகள், 344 பேரூராட்சிகள் மற்றும் 52,321 ஊரக குடியிருப்புகளில் உள்ள 4.53 கோடி மக்களுக்கும் மேல் பயன்பெற்று வருகிறார்கள்.

இனிவருங்காலங்களில், சென்னை உட்பட தமிழ்நாடு முழுவதும் உள்ள அனைத்து பகுதிகளுக்கும் பாதுகாப்பான குடிநீரினை சீரான முறையில் வழங்குவதற்கான நடவடிக்கைகளை அலுவலர்கள் தொய்வில்லாமல் மேற்கொள்ள வேண்டும். பருவமழை தொடங்குவதற்கு முன்னதாக மேல்நிலை மற்றும் கீழ்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளை சுத்தப்படுத்த வேண்டும்.

மேலும், இயக்கம் மற்றும் பராமரிப்புப் பணிகளை நிர்ணயிக்கப்பட்ட கால அளவிற்குள் முடித்திட வேண்டும். பராமரிப்புப் பணிகளை மேற்கொள்வதற்கு முன்னதாக உரிய கால இடைவெளியில், பொதுமக்களுக்கு, மேற்கொள்ளப்படவுள்ள பணிகள் குறித்த விவரங்களை தெரிவித்திட வேண்டும். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்ட புதிய குடிநீர் திட்டப் பணிகளின் மூலம் வழங்கப்பட வேண்டிய வீட்டு இணைப்புகள் அனைத்தும் நிர்ணயிக்க ப்பட்ட கால அளவிற்குள் வழங்கிட வேண்டும் என அமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில் அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் / பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் மரு. ஜெ.ராதாகிருஷ்ணன், அரசு முதன்மைச் செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, முனைவர் தா.கார்த்திகேயன், தமிழ்நாடு நகர்ப்புற உள்கட்டமைப்பு நிதிச் சேவைகள் நிறுவனத் தலைவர் / அரசு முதன்மைச் செயலாளர் மரு. எஸ்.விஜயகுமார், சென்னை குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குநர் இரா.கிர்லோஷ்குமார், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர், வி.தட்சிணாமூர்த்தி, பேரூராட்சி களின் இயக்குநர், கிரன் குராலா, நகராட்சி நிர்வாக இயக்குநர் சிவராசு, ஊரக வளர்ச்சித் துறை, நீர்வளத் துறை அலுவலர்கள், தலைமைப் பொறியாளர்கள் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## தமிழ்நாடு மாணவர் இயக்கங்களின் கூட்டமைப்பு சார்பில்

# 'நீட்' எதிர்ப்புப் போராளிகளுக்கு வணக்கம் செலுத்தும் நிகழ்வில், பெருந்திரளாய் பங்கேற்பீர்!

## கழக மாணவர் அணிச் செயலாளர் சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ. வேண்டுகோள்!

சென்னை, ஆக.31-

தமிழ்நாட்டு மாணவர்களின் மருத்துவராகும் கனவை சிதைத்து உயிர் கொல்லியாக உருவெடுத்துள்ள நீட் தேர்வு திணிப்பை எதிர்த்து முதல் களபலியாய் உயிர்நீத்த அன்புத் தங்கை அனிதாவின் நினைவு நாள் செப்டம்பர் 1. அரியலூர் அனிதாவில் தொடங்கிய நீட் தேர்வால் ஏற்பட்ட மரணம், குரோம்பேட்டை ஜெகதீஸ்வரன் வரை தொடர்கிறது.

முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான கழக அரசு, நீட் தேர்வை தமிழ்நாட்டிலிருந்து ஒழித்துக் கட்ட அனைத்து வகையான முயற்சிகளையும் முன்னெடுத்து வருகிறது. அதற்கான காலம் வெகு தொலைவில் இல்லை. எனவே, மாணவச் செல்வங்கள் தன்னம்பிக்கையுடனும் - மன உறுதியுடனும் பொறுமை காத்திருக்க வேண்டுகிறோம்.

நீட் எதிர்ப்பு போராளிகளுக்கு வீரவணக்கம் செலுத்தும் நிகழ்வை தமிழ்நாடு மாணவர் இயக்கங்களின் கூட்டமைப்பு (FSOTN) சார்பில், அனைத்து மாவட்டங்களிலும் கல்லூரிகளிலோ அல்லது தந்தை பெரியார் சிலை, அண்ணல் அம்பேத்கர் சிலை, பேரறிஞர் அண்ணா சிலை ஆகியவற்றின் முன்பாகவோ நீட் எதிர்ப்புப் போராளி தங்கை அனிதாவின் படத்தை வைத்து மலரஞ்சலி செலுத்திட முடிவெடுக்கப்ப ட்டுள்ளது.

எனவே, கழக மாணவர் அணியின் மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் அந்தந்த மாவட்டத்திலுள்ள தமிழ்நாடு மாணவர் இயக்கங்களின் கூட்டமைப்பு (FSOTN) தோழர்களுடன் இணைந்து, கழக மாணவர் அணியின் மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் நிர்வாகிகள், கல்லூரி மாணவர் அமைப்புகளின் நிர்வாகிகளுடன் பெருமளவில் பங்கேற்று, நீட் எதிர்ப்பு போராளிகளுக்கு அஞ்சலி செலுத்துமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு கழக மாணவர் அணி செயலாளர் சி.வி.எம்.பி. எழிலரசன் எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

## தலைமைப் பொதுக்குழு உறுப்பினர்

# மின்னல் கந்தப்பன் இல்ல திருமண வரவேற்பு!

## அமைச்சர்கள் - கழகத்தினர் வாழ்த்துகின்றனர்

சென்னை, ஆக. 31 -

சென்னை தெற்கு மாவட்ட பொதுக்குழு உறுப்பினர் மின்னல் கந்தப்பன் புதல்வர் திருமண வரவேற்பு நிகழ்ச்சி நாளை நடைபெறுகிறது. இதில் அமைச்சர்கள், கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு வாழ்த்துகின்றனர்.

தி.மு.கழகத் தலைவர் - முதலமைச்சர் மு.க. ஸ்டாலின், கழக இளைஞர் அணிச் செயலாளரும் - இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோரது நல்வாழ்த்துக்களுடன் சென்னை தெற்கு மாவட்டக் கழக தலைமைப் பொதுக்குழு உறுப்பினர் மின்னல் கந்தப்பனின் புதல்வர் கே.ஹேமகுமார் என்பவருக்கும், (USA) கொலரடோ மாநிலம், டெண்வர் நகரில் வசிக்கும் மைக்கேல்அனெட் ஆகியோரின் புதல்வி குமாரத்தி லாரன் ஆகியோரது திருமண வரவேற்பு நிகழ்ச்சி நாளை (01-09-2023 வெள்ளிக்கிழமை ) மாலை 6 மணியளவில் சென்னை 600 004, கிருஷ்ணா ஹால் IV, 2வது தளத்தில் நடைபெறுகிறது.

இம்மணவிழா வரவேற்பு நிகழ்ச்சியில் தமிழ்நாடு அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற - சட்டமன்ற உறுப்பினரகள் - சென்னை மாநகராட்சி மேயர், துணை மேயர், மாநகராட்சி மன்ற உறுப்பினர்கள், பகுதிக் கழகச் செயலாளர்கள், வட்டக் கழகச் செயலாளர்கள், கழக முன்னணியினர் கலந்து கொண்டு வாழ்த்துகின்றனர்.



பெருநகர சென்னை மாநகராட்சி ரிப்பன் கட்டடக் கூட்டரங்கில் மேயர் திருமதி ஆர்.பிரியா தலைமையில் துணை மேயர் மு.மகேஷ்குமார் முன்னிலையில் நேற்று (30.08.2023) நடைபெற்ற மாமன்றக் கூட்டத்தில் 146ஆவது வார்டு மாமன்ற உறுப்பினர் கு.ஆலப்பாக்கம் கே.சண்முகம் அவர்களின் மறைவையொட்டி, இரங்கல் தீர்மானம் நிறைவேற்றி, மௌன அஞ்சலி செலுத்தி மாமன்றக் கூட்டம் இன்று 31.08.2023 ஒத்திவைக்கப்பட்டது.

## சிகிச்சை முடிந்து

# அமைச்சர் மா.சுப்பிரமணியன் வீடு திரும்பினார்!

சென்னை, ஆக.31-

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (30.08.2023) அதிகாலை நடைப்பயிற்சி முடித்து விட்டு பார்வையாளர்களை சந்திக்கும் போது தலைசுற்றல் ஏற்பட்டது.

உடனடியாக கலைஞர் நூற்றாண்டு உயர் சிறப்பு மருத்துவமனைக்கு அழைத்து செல்லப்பட்டு தேவையான மருத்துவ பரிசோதனைகள் செய்யப்பட்டது. பரிசோதனையின் அடிப்படையில் அவர் தமிழ்நாடு அரசு பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனைக்கு அழைத்து வரப்பட்டு (Coronary angiogram) இருதய இரத்த நாள பரிசோதனை செய்ததில் குறிப்பிடத்தக்க அடைப்பு எதுவும் இல்லை என தெரியவந்துள்ளது.

அமைச்சர் மா.சுப்பிரமணியனுக்கு மருத்துவ சிகிச்சை போதுமானது என்று முடிவு எடுக்கப்பட்டு, நேற்று பகல் 2.10 மணியளவில் மருத்துவமனையிலிருந்து இல்லம் திரும்பினார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### க.வே. செழியன்

### ஆகஸ்ட் 31 (2022)



தனது இளமைக் காலத்திலேயே கழகப் பணியாற்ற தொடங்கியவர்.

1975ஆம் ஆண்டு தனது பகுதியில் உதயசூரியன் நற்பணி மன்றம் தொடங்கி, பின்னர் பெரியார் எழுச்சி மன்ற காப்பாளராகவும், பின்னர் வட்டக் கழகத்தில் பகுதி பிரதிநிதியாகவும் திருவல்லிக்கேணி பகுதி துணைச் செயலாளராகவும், பொறுப்பாளராகவும் பொறுப்பு வகித்து, அதனைத் தொடர்ந்து பகுதிக் கழகச் செயலாளராக தேர்ந்தெடுக்கப்பட்டு 15 ஆண்டுகளுக்கு மேலாக பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றிவர்.

கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

"திருவல்லிக்கேணியில் கழகம் வளர்த்த உண்மைத் தொண்டர்" என தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது இரங்கலில் குறிப்பிட்டுள்ளார்.

தலைமைக் கழகம்
தி.மு.க.